இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 93 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 27 – வெள்ளிக்கிழமை 13 நவம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 93 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 27 - Friday 13 November 2026 - Madurai 8 Pages ₹ 5.00

கள்ளக்குறிச்சி : பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி!

த.வெ.க. எம்.எல்.ஏ. மீது பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்க!

டி.ஜி.பி.யிடம் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு!



கிரீஸ் நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரில் காவியா கலாநிதி மாறன், அனிருத் ரவிச்சந்தர் திருமணம் நேற்று முன்தினம் நடைபெற்றது. மணமக்களுடன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சன் டிவி குழுமத் தலைவர் கலாநிதி மாறன், காவேரி கலாநிதிமாறன், ரவிச்சந்தர், லட்சுமி ஆகியோர் உள்ளனர்.

சென்னை, நவ.13-

“கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியது குறித்து த.வெ.க. எம்.எல்.ஏ. மீது ‘பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்’ கீழ் வழக்குப் பதிவு செய்து சி.பி.சி.ஐ.டி. மூலம் விசாரணை நடத்த வேண்டும்” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனரிடம் (டி.ஜி.பி.) நேரில் மனு அளித்துள்ளார்.

தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள், நேற்று (12.11.2026) காலை, தமிழ்நாடு அரசின் காவல்துறை தலைமை இயக்குநர் (DGP) அவர்களை நேரில் சந்தித்து, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஜே.இ. பத்மஜா, இ.ஆ.ப., அவர்களுக்கு பாலியல் தொல்லை அளித்தல், ஆபாசமான மின்னணுச் செய்திகளை அனுப்புதல், அரசு ஊழியரை மிரட்டுதல் மற்றும் அவரது இல்லத்திற்குள் அத்துமீறி நுழைதல் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சி. அருள் விக்னேஷ் (தமிழக வெற்றிக் கழகம்) மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யவும், நியாயமான, சுதந்திரமான விசாரணை நடத்தவும் கோரும் புகார் மனு அளித்தார்.

அப்புகார் மனுவின் தமிழாக்க விவரம் பின்வருமாறு :-

தமிழ்நாடு சட்டமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) அமைப்புச் செயலாளராக நான், ஆர்.எஸ். பாரதி, இருக்கிறேன். ஒரு குடிமகனாகவும், குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியம், குடிமைப் பணிகளின் சுதந்திரம் ஆகியவை தொடர்பான தீவிர பொது நலன் சார்ந்த விவகாரங்களை எழுப்ப அரசியலமைப்பு மற்றும் தார்மீகக் கடமை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் நிர்வாகியாகவும் இந்தப் புகாரைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்தப் புகார், ஆளும் தமிழக வெற்றிக் கழகத்தைச் (த.வெ.க.) சேர்ந்த, கள்ளக் குறிச்சி சட்டமன்றத் தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான



சி. அருள் விக்னேஷ் (இதன்பின்னர் “குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்” என அழைக்கப்படுவார்) மீதான தீவிர குற்றச்சாட்டுகள் தொடர்பானது. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஜே.இ. பத்மஜா, இ.ஆ.ப., அவர்களுக்கு (இதன்பின்னர் “மாவட்ட ஆட்சியர்” என அழைக்கப்படுவார்) வாட்ஸ்அப் மூலமாக ஆபாசமான மற்றும் பாலியல் ரீதியான தகாத செய்திகளை அவர் அனுப்பியதாகவும், மேலும் முன்னறிவிப்பின்றி அவரது அரசு இல்லத்திற்குச் சென்றது உட்பட அவரிடம் தகாத முறையிலும் மிரட்டும் தொனியிலும் நடந்து கொண்டதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1. பிணையில் வெளிவர முடியாத குற்றங்களை வெளிப்படுத்துகின்றன!

இக்குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கும்பட்சத்தில், அவை பிணையில் வெளிவர முடியாத (cognizable) குற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இவை ஒரு பெண்ணின் கண்ணியத்திற்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு மட்டுமல்லாமல், ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு மக்கள் பிரதிநிதி, ஒரு மாவட்டத்தின் மிக உயர்ந்த நிர்வாக அதிகாரியை மிரட்டும் முயற்சியையும் உள்ளடக்கியது. இத்தகைய நடத்தை நிரூபிக்கப்பட்டால், அது சட்டத்தின் ஆட்சியின் ஆணிவேரையே தாக்குவதுடன், அதிகாரிகள், குறிப்பாகப் பெண் அதிகாரிகள் அச்சமோ பாரபட்சமோ இன்றித் தங்கள் கடமைகளை ஆற்றும் திறனையும் பாதிக்கும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

பெண் கலெக்டருக்கு குறுஞ்செய்தி! த.வெ.க. எம்.எல்.ஏ. மீது

புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத தலைமைச் செயலாளர்!

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொந்தளிப்பு!

சென்னை, நவ. 13

பெண் கலெக்டருக்கு வாட்ஸப்பில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக கூறப்படும் த.வெ.க.,எம்.எல்.ஏ., மீது, அரசு எடுக்க உள்ள நடவடிக்கை என்னவென்று, சக ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் எதிர்பார்த்து காத்திருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டராக இருப்பவர் பத்மஜா. இவருக்கு கள்ளக்குறிச்சி தொகுதி த.வெ.க., எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ், வாட்ஸாப்பில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாகவும், இது குறித்து பத்மஜா, தலைமைச் செயலர் சாய் குமாரிடம் புகார் அளித்ததாகவும் தகவல் வெளியானது.

சம்பவம் தொடர்பாக, 10 நாட்களுக்கு முன்பு, கலெக்டர் பத்மஜாவின் கணவரும், விழுப்புரம் மாவட்ட கலெக்டருமான ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமைச் செயலர் சாய்குமாருக்கு, புகார் கடிதம் அனுப்பியுள்ளார். இந்த புகார் கடிதம் குறித்து, தற்போது பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ., மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இது, அரசுக்கு கடும் நெருக்கடியை கொடுத்துள்ளது.

இந்தப் புகார் மீது தலைமைச் செயலாளரும், முதல்வரும் நடவடிக்கை எடுக்காததால் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் கொந்தளிப்பில் உள்ளனர்.

பெண் கலெக்டருக்கு குறுஞ்செய்தி - மனுக்கொடுக்க வந்தவரைத் தாக்கிய

பேரவை துணைத் தலைவர் - த.வெ.க. எம்.எல்.ஏ.வுக்கு பட்டுவேட்டி - சட்டை வழங்கிய முதல்வர் விஜய்!

தீபாவளி வாழ்த்தும் சொல்லி அனுப்பிய கொடுமை! சமூக வலைதளங்களில் கடும் விமர்சனம்!

சென்னை, நவ.13-

“கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ.வுக்கும் மனுக்கொடுக்க வந்தவரைத் தாக்கிய பேரவை துணைத் தலைவருக்கும் பட்டுவேட்டி, சட்டை வழங்கி தீபாவளி வாழ்த்தும் தெரிவித்தும் அனுப்பியுள்ளார் முதல்வர் விஜய்!

இதுபற்றிய விவரம் வருமாறு:-

த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் முதல்வர் விஜய் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வையும் தனித்தனியாக சந்தித்து பேசினார். சர்ச்சை எம்.எல்.ஏ.க்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவிய சூழ்நிலையில் எந்த வித ஆக்ஷனும் இல்லாமல் அவர்களுக்கு தீபாவளி பரிசாக பட்டு வேஷ்டி புடவை வழங்கி அனுப்பியது சமூக வலைதளங்களில் பெரும் விமர்சனத்தை உண்டாக்கியுள்ளது. கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ் செய்தி அனுப்பிய விவகாரம் சர்ச்சையாகியுள்ளது.

அதுபோல துறையூரில் அடிப்படை வசதிகள் தொடர்பாக புகாரளிக்க சென்ற நபரை துணை சபாநாயகர் ரவிசங்கர் தாக்கிய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தடுத்து புகார்கள் எழுந்து வருவது த.வெ.க. தலைமைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதை தொடர்ந்து, கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்த த.வெ.க. தலைமை முடிவு செய்தது.

மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணி அளவில் முதல்வர் விஜய் தலைமையில் ஆலோசனை கூட்டம் தொடங்கியது. எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் தனித்தனியாக முதல்வர் விஜய் அழைத்து பேசியதாக கூறப்படுகிறது.

சர்ச்சை எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எந்தவித ஆலோசனையும் முதல்வர் விஜய் செய்யவில்லை என்ற தகவல் அனைத்து தரப்பினர் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. அதிரடி ஆக்ஷன் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில், ஒன்றுமில்லாமல் எம்.எல்.ஏ.க்களுக்கு அறிவுரை கூறி அனுப்பியது எந்த வகையில் நியாயம்? வார்னிங் மட்டும் தானா என்று சமூக வலைதளங்களில் நெட்டிசன்கள் வறுத்தெடுத்து வருகின்றனர்.

கூட்டத்தின் முடிவில் அனைத்து த.வெ.க. எம்.எல்.ஏ.க்களுக்கும் தீபாவளி பரிசாக முதல்வர் விஜய் பட்டு வேஷ்டி சட்டை மற்றும் பட்டு சேலை வழங்கினார். அவ்வளவு தான் பஞ்சாயத்து முடிந்தது என்ற திரைப்பட வசனத்துக்கு ஏற்ப ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்களுடன் முதல்வர் விஜய் தனித்தனியாக புகைப்படம் எடுத்து கொண்டு, நட்சத்திர விடுதியை விட்டு ஒவ்வொருவராக வெளியேறினர்.